பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 கார்த்திகை 10 திங்கட்கிழமை (25-11-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 282

# யுத்தத்தில் அரசுக்கு செய்மதி வசதி; அமெரிக்கா வழங்க இணங்கியது!

## அந்நாட்டின் தலையீடு அதிகரிப்பு

கொழும்பு, நவம்பர் 25

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அரசுப் படைகளுக்கு செய்மதி மூலம் படம் எடுத்து தகவல்களைப் பெற்றுத்தரும் உதவியை வழங்குவதற்கு அமெரிக்கா முன்வந்திருக்கின்றது.

இதேவேளை, இலங்கை விவகாரத்தில் அமெரிக்காவின் தலையீடும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

'அமெரிக்கா பெரிய அளவில் வருகிறது' என்ற தலைப்பில் நேற்றைய 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் இக்பால் அத்தாஸ் எழுதியுள்ள பாதுகாப்பு நிலைவரம் தொடர்பான கண்ணோட்டத்திலேயே இத்தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அக் கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ கடந்த வாரம் அமெரிக்க இராணுவக் கட்டளைப் பீடம் மற்றும் பொது நிர்வாகக் கல்லூரியைச் சேர்ந்த அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று இலங்கை வந்து சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு இரு நாள்கள் பயிற்சி அளித்து விட்டுத் திரும்பியுள்ளது.

★ நடைபெறும் யுத்தத்தில் பயங்கரவாதத்தை ஒழிக்க, செய்மதி மூலம் படம் எடுத்து தகவல்களை பெறுவதற்கான உதவியை வழங்குவதற்கு அமெரிக்கா முன்வந்துள்ளது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## நாளை மறுநாள் மாவீரர் தினம்:

## தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு மிகத் தீவிரம்!

கொழும்பு, நவ. 25

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் தினம் நாளை மறுதினம் அனுஷ்டிக்கப்படுவதை ஒட்டி கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப் படுத்தப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் விடுதலைப்புலிகளின் இலக்காக கோட்டையிலுள்ள இலங்கை வங்கிக் கட்டடம், களனி திஸ்ஸ மின்விநியோக நிலையம், பிரதான தபாலகம், கொலன்னாவ எண்ணெய்க்குதம், கொழும்புத் துறைமுகம் ஆகியன இருக்கலாம் என ஊகிக்கப்படுவதால் அந்த இடங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப் பட்டுள்ளது என்று கொழும்புப் பிரதிப் பொலீஸ்மா அதிபர் திஸநாயக்கா தெரிவித்தார்.

வெளி இடங்களில் இருந்து ஏராளமான பொலீஸார் அழைக்கப்பட்டு பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் —

பாதுகாப்பின் நிமித்தம் அவர்களின எண்ணிக்கை குறித்து தகவல் தெரிவிக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்., கிளிநொச்சியில் தாக்குதல்கள் அதிகரிப்பு

கிளிநொச்சியை படையினர் கைப்பற்றிய பின்னர் கடந்த இரு வாரங்களாக அங்கு மோதல்கள் அதிகரித்துள்ளதாக ''சண்டே லீடர்'' ஆங்கில வார இதழ் தெரிவித்துள்ளது.

படையினரின் முன்னணிக் காவலரண்களை விடுதலைப் புலிகள் நெருங்கியுள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒக்ரோபர் மாதத்துக்கு பின்னர் யாழ். மாவட்டத்தில் படையினர் கைப்பற்றியுள்ள பகுதிகளில் நூறுக்கும் மேற்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்றும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ-3-150)

## கடற்படைத் தளபதியின் பதவிக் காலம் நீடிப்பு

கொழும்பு, நவ. 25

கடற்படைத் தளபதி மொஹான் சமரசேகரவுக்கு டிசம்பர் 31 ஆம் திகதி வரை சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவரது சேவைக் காலம் கடந்த 16 ஆம் திகதி முடிவடைந்த போதும் புதிய ஒருவர் தளபதியாக நியமிக்கப்படவில்லை. அதனால் சமரசேகராவின் பதவிக்காலம் நீடிக்கப்பட்டிருக்கிறது.

புதிய தளபதியாக, கிழக்கு மாகாண கடற்படைத் தளபதி ரி. கே. திஸநாயக்கா அல்லது தலைமையக பிரதான அதிகாரி சிசில் [illegible] நியமிக்கப்படலாம் எனக் கருதப்படுகிறது. (உ-3-150)

## தென்மராட்சியில் நேற்று ஊரடங்கு

யாழ்ப்பாணம், நவ. 25

தென்மராட்சிப் பகுதியில் நேற்று முழுநாள் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டது.

யாழ் நகரில் இருந்து கண்டி வீதி வழியாக நாவற்குழிக்கு அப்பால் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. அதனால் தென்மராட்சியில் நேற்று இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து தகவல் ஏதும் கிடைக்கவில்லை. (உ)

## மாங்குளம் பகுதியில் குண்டு வீச்சு

கொழும்பு, நவ 25

கிளிநொச்சி, மாங்குளம் பகுதிகளில் கடந்த புதன் கிழமை 'கிபிர்' விமானங்கள் குண்டு வீச்சையும், றொக்கட் தாக்குதலையும் நடத்தின.

காட்டுப் பகுதிகளிலும், குடியிருப்புப் பகுதிகளிலும் இக் குண்டு வீச்சு இடம் பெற்றதாகவும்—

சேத விவரங்கள் தெரிய வரவில்லை என்றும்—

வவுனியாவுக்குக் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(உ-3-150)

## அரசின் முயற்சிக்கு பலன் இல்லை

கொழும்பு, நவ. 25

இராணுவத்துக்கு புதிதாகப் பத்தாயிரம் பேரைச் சேர்த்துக் கொள்ள அரசு எடுத்த முயற்சிக்கு உரிய பலன் கிடைக்கவில்லை என்று ''சண்டே ரைம்ஸ்'' தெரிவித்துள்ளது.

இம்முறை படையில் சேர மூவாயிரம் பேர் வரையிலேயே [illegible] அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-3-150)

50 படையினரை ஏற்றிச்சென்ற

## அன்ரனோவ் விமானம் மயிரிழையில் தப்பியது!

கொழும்பு, நவ. 25

கடந்த செவ்வாய்க்கிழமை பலாலிக்கு 50 படையினரை ஏற்றிவந்த 'அன்ரனோவ் - 32' ரக போக்குவரத்து விமானம் விபத்தில் இருந்து மயிரிழையில் தப்பியதாக 'சண்டே ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

இரத்மலானை விமானத்தளத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் கற்பிட்டிக்கு மேலாக பறந்து கொண்டிருந்த சமயம், விமானத்தின் 'ஹைட்ரோலிக்' கருவி ஒன்று இயங்க மறுத்ததாகவும் —

அந்த விமானத்தில் பயணம் செய்த ரஷ்ய நாட்டு விமானி துரிதமாகச் செயற்பட்டு அக்கருவியை திருத்தியதால் விமானம் பத்திரமாக இரத்மலானையில் மீண்டும் தரையிறங்கியதாகவும் — மேலும் அச்செய்தி தெரிவித்தது.

கடந்த வருடம் இதே 'ஏ. என். 32' ரக விமானம் ஒன்று நீர் கொழும்பு கடற் பகுதிக்கு மேலாக பறந்து கொண்டிருக்கையில் மர்மமான முறையில் கடலில் வீழ்ந்து நொறுங்கியது குறிப்பிடத்தக்கது.

(உ-3-150)

## திருமலை 'டொக்யாட்டில்' கிரனேட் வீச்சுச் சம்பவம்

### ஆறு கடற்படையினர் காயம்

கொழும்பு, நவ. 25

திருகோணமலை டொக்யாட் பகுதியில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் ஆறு கடற்படையினர் காயமடைந்தனர் என அறிவிக்கப்படுகின்றது.

இச்சிப்பாய்கள் சிவில்உடையில் சென்று கொண்டிருந்த சமயம் அவர்கள்மீது இரண்டு கிரனேட்டுக்களை இனந் தெரியாதோர் வீசியதாகத் தெரியவந்தது.

இச்சம்பவத்தை அடுத்து நேற்று திருகோணமலை நகரப் பகுதியில் கொட்டும் மழைக்கு மத்தியிலும் தேடுதல் வேட்டை நடத்தப்பட்டது.

நகரின் மத்திய பகுதியில் உள்ள மக்கள் சிவன் கோயில் பகுதியில் கூடுமாறு பணிக்கப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா பாரிஸ் பயணம்

கொழும்பு, நவ. 25

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு நேற்றுப் பாரிஸ் பயணமானார்.

இரு நாடுகளுக்கிடையேயும் தற்போது நிலவும் நெருங்கிய உறவுகளையும் ஒத்துழைப்பையும் மேலும் பலப்படுத்துவதற்கு இந்த விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததென இரு சாராரும் கருதுவதாக பிரெஞ்சு வெளிநாட்டு அதிகாரி ஜெக் ரமாட் ஹார்ட் தெரிவித்து உள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க இன்று பிரெஞ்சு ஜனாதிபதி ஷிராக்கைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார். அதன் பின்னர் பிரெஞ்சு தேசியப் பேரவையின் சபாநாயகரைச் சந்திப்பார்.

புதன்கிழமை பிரான்ஸின் கைத்தொழில் அதிபர்களையும் வெளிநாட்டு வர்த்தக

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பாரிஸ் விஜயத்தை ஒட்டி பலத்த பாதுகாப்பு ஏற்பாடு

லண்டன், நவ. 25

ஜனாதிபதி சந்திரிகாவின் பிரான்ஸ் விஜயம் தொடர்பாக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

அவரது விமானம் கொழும்பிலிருந்து புறப்பட்டுச் செல்லும் வரை அவரது பயணத் திகதிகள் பற்றிய விவரங்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்தன.

விடுதலைப் புலிகளால் ஜனாதிபதியின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என சந்தேகிக்கப்படுவதாலேயே அவரின் பிரான்ஸ் விஜயம் தொடர்பாக பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கொழும்பில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத்துக்கு ஆள்சேர்ப்பதை உலக வங்கியின் அழுத்தம் தடுக்கும்!

## பொருளியல் வல்லுநர் கருத்து

கொழும்பு, நவ. 25

''அரச துறை விரிவாக்கத்துக்கு பதிலாக சமாதான முயற்சிக்கும் பொருளாதாரச் சீர்திருத்தத்துக்கும் முன்னுரிமை அளிக்கவேண்டும் என இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் இலங்கையிடம் அழுத்திக் கூறியுள்ளன'

இந்த அழுத்தம் இராணுவத்துக்கு ஆள்களை சேர்த்து யுத்தத்தை தொடர்வதற்கு அரசுக்குத் தடையாக இருக்கலாம்.''

— பொருளாதார வல்லுநர் சுனில் பஸ்ரியன் மேற்கண்டவாறு பி. பி. ஸிக்கு கருத்துத் தெரிவித்தார்.

இலங்கை அரசு யுத்தத்திற்கு முன்னுரிமை வழங்கி வருகிறது என்ற அபிப்பிராயம் நிலவும் இவ்வேளையில் சமாதான முயற்சிகள் மற்றும் பொருளாதார சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்று அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார் அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை அரசு வடபகுதிப் பிரச்சினைக்கு முன்னுரிமை வழங்கியதால் பொருளாதார முன்னேற்றம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற நிலைப்பாட்டையே உலக வங்கி எடுத்துள்ளது என நான் நினைக்கிறேன்.

இக் காரணத்தினாலேயே இம்முறை சமாதான முயற்சிகளையும், பொருளாதார சீர்திருத்தங்களையும் உலக வங்கி ஒன்றாக இணைத்துள்ளது.

அரசதுறையை மேலும் விரிவாக்காமல், தனியார் மயமாக்கலின் மூலம் பொருளாதார மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும் என்பதே உலக வங்கியின் நோக்கமாக இருக்கிறது.

யுத்தத்தை தொடர இராணுவத்துக்கு ஆள்களைத் தெரிவு செய்து கொண்டிருக்க அரசதுறை விரிவடையும்; அரசதுறைக்கான செலவீனமும் அதிகரிக்கும்.

முன்னர் அரசதுறையில் அதிக எண்ணிக்கையானவர்களாக ஆசிரியர்களே இருந்தனர். இன்று அரச துறையில் பெரும் எண்ணிக்கையானவர்களாக இராணுவத்தினரே உள்ளனர். இவர்களுக்கு பெருந்தொகையை செலவிட வேண்டியுள்ளது.

இந் நிலையில் அரச துறையை விரிவுபடுத்தக் கூடாது என்ற உலக வங்கியின் நிபந்தனை புதிதாக இராணுவத்தினருக்கு ஆள்களைச் சேர்ப்பதற்குத் தடையாக இருக்கலாம்.

சுருங்கக் கூறினால் பொருளாதாரமும், யுத்தமும் ஒன்றுடன் ஒன்று ஒட்டிப் பிணைந்துள்ளன என்றார்.

(உ-3-10)

## மரண அறிவித்தல்கள்

### தம்பிமுத்து ஆறுமுகம் (R.T.A.)

காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த R.T. ஆறுமுகம் (முன்னாள் பிரபல வர்த்தகர், நொச்சியாகம) 23 - 11 - 96 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும், கந்தசாமி (Accountant), துரைச்சாமி (வர்த்தகர், வவுனியா), காலஞ்சென்ற பொன்னம்பலம் (வர்த்தகர், நொச்சியாகம), ஜெயலட்சுமி, செல்வராணி, பராசக்தி, புனிதவதி ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா (கணேசன் ஸ்ரோர்ஸ்), பத்மசிங்கம் (வர்த்தகர், அப்புத்தளை), தியாகராசா (C.T.B.), இராஜரட்ணம் (Star Line printers), இந்திராதேவி, நாகம்மா, நவமலர் ஆகியோரின் அன்பு மாமனாரும், டாக்டர் சங்கரப்பிள்ளையின் (அரசினர் வைத்தியசாலை, நயினாதீவு) மைத்துனரும், பகவதிஅம்மாவின் சகலனும், மலேசியா சோமசுந்தரம் (ஆசிரியர்), காலஞ்சென்ற மார்க்கண்டு செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (24-11-96) மட்டக்குழியில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
செ. கந்தையா
(மருமகன்)

124, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(43797)

### பி. பா. தியாகராஜக் குருக்கள்

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைப் பிறப்பிடமாகவும், சுழிபுரம் குடியிருப்பை வசிப்பிடமாகவும் கொண்டிருந்தவரும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய பி.பா. தியாகராஜக் குருக்கள் கொழும்பில் காலமானார்.

அன்னார் சரோஜினிதேவியின் அன்புக் கணவரும், ரவிச்சந்திரிகா, நிரஞ்சனி, வாகீஸ்வரி, கணேசரஞ்சன் (சுவிஸ்), பாலசுப்பிரமணியன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், கணேச சர்மா, ஜனார்த்தனேஸ்வர சர்மா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-11-96 வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்றன என்பதை யாவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல் :
மு பாலகுருசாமி சர்மா
(மைத்துனர்)

குடியிருப்பு,
சுழிபுரம்.

(43794)

## இரண்டாம் வருட அஞ்சலி



மலர்வு: 13 - 03 - 1923

உதிர்வு: 18 - 11 - 1994

### அமரர் சே. சண்முகநாதன்
(கிளி)

கண் விழிக்குள் நிலவான
காந்த சக்தியே — உங்கள்
பொன்மொழிகள் வாழ்த்திட
பூமாலை அணிந்து வணங்குகின்றோம் — இன்று
ஈராண்டு மறைந்த பின்பும்
இறை நிழலான தந்தையே — உங்கள்
பெயர் வாழ, புகழ் வாழ,
நாளும் அஞ்சலிக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

50/23, செட்டித்தெரு,
நல்லூர்.

(43796)

---

### அரச ஊழியருக்கு நஷ்ட ஈடு

# ரேபியாவின் பொறுப்பு அதிகார சபைக்கு மாற்றம்

வன்செயல்களால் பாதிக்கப்பட்டு நஷ்டஈடு கோரியுள்ள அரச ஊழியர்களுக்கு கொடுப்பனவு வழங்கும் பணி வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகாரசபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இப்பணியை மேற்கொண்டு வந்த ''ரேபியா'' நிறுவனம் நஷ்டஈடுகோரிய அரச ஊழியர்களின் 6 ஆயிரத்து 500 கோவைகளையும் அதிகார சபையிடம் கையளித்துள்ளது.

இந்த நஷ்டஈடு வழங்க வருடாந்தம் 10 கோடி ரூபா இந்த அதிகாரசபைக்கு வழங்கப்படவிருக்கிறது.

(உ-3-150)

# தமிழ் கடிதங்களுக்கு பதில் தமிழிலேயே தர வேண்டும்

## சகல திணைக்களங்களுக்கும் பணிப்பு

கொழும்பு, நவ. 25

அரச திணைக்களங்களுக்கு தமிழில் வரும் கடிதங்களுக்கு தமிழிலேயே பதில் அனுப்ப வேண்டும் என்ற கண்டிப்பான உத்தரவை பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு சகல திணைக்களங்களுக்கும் விடுத்துள்ளது.

20/96 ஆம் இலக்க சுற்றுநிருபம் மூலம் விடுக்கப்பட்ட இந்த உத்தரவில், தமிழ் தட்டச்சாளர்கள் திணைக்களங்களில் இல்லையானால் பகுதிநேர அடிப்படையில் ஆள்களை அமர்த்துமாறும் கேட்கப்பட்டுள்ளது.

(உ-3-150)

### கப்பலில் இருந்து இறக்கும் போது

# அவசர, அத்தியாவசிய பொருளுக்கு முன்னுரிமை

## யாழ். மக்கள் குழு வலியுறுத்து

யாழ்ப்பாணம், நவ. 25

குடா நாட்டுக்கு பொருள்கள் எடுத்துவரும் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்கும் போது அவசர — அத்தியாவசிய — பொருள்களுக்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்ப்பாணம் சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு யாழ். கட்டளைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜானக பெரேராவைக் கேட்டுள்ளது.

கொழும்பில் இருந்து கப்பல்களில் எடுத்து வரப்படும் பொருள்களை காங்கேசன்துறை பருத்தித்துறை இறங்குமுகங்களில் இறக்கும் போது மருந்து, உணவுப் பொருள் போன்றவற்றுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்.

குடிவகை, குளிர்பானம், தேவையற்ற ஆடம்பரப் பொருள்களுக்கு முன்னுரிமை அளிப்பதை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு கோருகிறோம்; இவ்வாறு அக்குழு மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுக்கு அனுப்பிய கடிதத்தில் கேட்டுள்ளது.

(உ-3)

# மட்டு. - வாழைச்சேனை போக்குவரத்துத் தடை

மட்டக்களப்புக்கும் வாழைச்சேனைக்கும் இடையில் போக்குவரத்துக்கு தாம் வழங்கி வந்த வழமையான பாதுகாப்பை கடந்த சில நாள்களாக படையினர் நிறுத்தியுள்ளனர்.

தினமும் படையினர் அப்பாதையில் சோதனை நடத்தி பாதுகாப்பை உறுதி செய்த பின்பே அப்பாதையில் போக்குவரத்து இடம் பெறுவது வழக்கம்.

படையினர் அப்பணியை நிறுத்தியுள்ளதால் அப்பாதை ஊடான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

கல்குடா-வாழைச்சேனைப் பாதையிலும் படையினர் பாதுகாப்பை நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

[உ-3-150]

# நாடாளுமன்றின் மேற்பார்வையின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகம்

## அரச தரப்பு எம். பி. யோசனை

கொழும்பு, நவ. 25

''வடக்கு — கிழக்கு நிர்வாகம் நாடாளுமன்றத்தின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும்.''

— இப்படி பொ. ஐ. மு நாடாளுமன்ற உறுப்பினர் பட்டி வீரக்கோன் நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் தெரிவித்தார். திட்ட அமுலாக்கல், இன அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் அவர் மேலும் கூறியதாவது;

நாடாளுமன்றத்தின் மேற்பார்வையில் வடக்கு- கிழக்கு நிர்வாகத்தை கொண்டு வருவதன் மூலம் அப்பகுதி மக்களின் சிவில் நிர்வாகத்துக்கு வழிவகுக்க முடியும். அத்துடன் ஜனநாயக வழியில் வந்த அரசியல் கட்சிகளும், வடக்கு — மாகாண சபையின் நிர்வாகத்தில் தமது பங்களிப்பை அளிக்கக் கூடியதாக இருக்கும்.

வடக்கில் சிவில் நிர்வாகத்தை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆனால் விடுதலைப் புலிகள் அதனை முறியடிக்க முனைகிறார்கள்.

சிவில் நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் பங்கு கொள்ள அரசியல் கட்சிகள் விரும்புகின்றன;

வடக்கு - கிழக்கு நிர்வாகத்தை நாடாளுமன்றத்தின் கீழ் கொண்டு வரவேண்டும். அப்போது அரசியல் கட்சிகளும் ஜனநாயக ரீதியில் இதில் பங்களிப்புச் செய்ய முடியும்.

விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியாக வெற்றி கொள்ளக்கூடிய வித்தியாசமான நிர்வாக முறைமைகளை நாம் வடக்கு - கிழக்குப் பகுதியில் அமுல் செய்ய வேண்டும்.

— இப்படி அவர் கூறினார்.

(இ-3)

# இன்னும் விடுதலை இல்லை

கொழும்பு கொம்பனித் தெருப்பகுதியில் நடந்த தேடுதல்களின் போது கைது செய்யப்பட்ட 8 யுவதிகளும், மற்றும் பல இளைஞர்களும், ஒரு வாரமாகியும் இன்னும் விடுதலையாகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்டவர்களின் பெற்றோர் இது தொடர்பாக உயர் மட்டத்துடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

# புதியகட்சி உதயம்

மக்கள் விடுதலை ஐக்கிய முன்னணி என்ற புதிய கட்சி ஒன்று கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கமாக் கருணதாஸ தலைவராகவும், சரத்தேவானந்தா செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்; (உ-3- 150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 175 பயணிகளுடன் கடத்தப்பட்ட விமானம் இந்து மா கடலில் வீழ்ந்து நொருங்கியது!

## மடகஸ்கார் அருகே சம்பவம்

லண்டன், நவம்பர் 25

**175 பயணிகளுடன் கடத்தப்பட்ட எதியோப்பிய விமானம் ஒன்று எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கொமறோஸ் தீவுகளுக்கு அருகில் இந்து சமுத்திரத்தில் விழுந்து நொருங்கியது. விமானத்தில் இருந்த பயணிகள், கடத்தல்காரர்கள் உட்பட 53 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர்; இதுவரை 90 பேரின் சடலங்களும் மீட்கப்பட்டன.**

நேற்று முன்தினம் இச் சம்பவம்இடம் பெற்றது.

எதியோப்பியத் தலைநகர் அடிஸ் அபாபாவிலிருந்து புறப்பட்ட கையோடு இந்த விமானம் கடத்தப்பட்டதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

வழமையாக இந்த விமானம் அடிஸ் அபாபாவிலிருந்து புறப்பட்ட பின்னர் கென்யாவின் தலைநகர் நைரோபியில் எரிபொருளை நிரப்பும் என்றும் —

ஆனால் நேற்று முன்தினம் அது இடைவழியில் கடத்தப்பட்டதால் நைரோபியில் எரிபொருள் நிரப்புவதற்காக தரையிறக்கப் படவில்லை என்றும் தெரியவந்தது.

விமானத்தைக் கடத்தியவர்கள் அதனை ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டு செல்லும்படி கட்டளையிட்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

இந்த நிலையில் —

ஆபிரிக்கக் கண்டத்தின் தன்ஸானியா, மொஸாம்பிக் நாடுகளின் கரைகளுக்கும் மடகஸ்தார் தீவுக்கும் இடையில் உள்ள கொமறோஸ் தீவுக்கு அருகே கடற்கரையோரத்துக்கு நெருக்கமாக கடலில் விமானம் வீழ்ந்து துண்டாகியது.

எரிபொருள் பற்றாக்குறை காரணமாக கொமறோஸ் தீவின் மொரூணி விமான நிலையத்தில் தரையிறங்குவதற்காக வந்து கொண்டிருந்த போதே அது கடலில் வீழ்ந்ததாக மொரூணியிலிருந்து வெளியான செய்திகள் தெரிவித்தன.

எரிபொருள் தீர்ந்ததை அடுத்து விமான ஓட்டி கடல் மட்டத்துக்கு சில அடி உயரம் வரைவிமானத்தை பதித்துக் கொண்டு வந்ததாகவும் —

எனினும் எரிபொருள் முற்றாகத் தீர்ந்ததால் கரைக்கு சற்றுத் தொலைவில் விமானம் கடலில் வீழ்ந்து நொருங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விமானம் கடலில் வீழ்ந்து மூன்று துண்டாகச் சிதறியதாக கரைக்கு அருகில் கலவா ஹோட்டலில் இருந்தவாறு நேரடியாக சம்பவத்தைக் கண்ட பெண் ஒருவர் பி. பி. ஸி. க்குத் தெரிவித்தார்.

விமானம் விழுந்து நொருங்கியதைக் கண்டதும் கடற்கரைப் பகுதியில் காணப்பட்டோர் கரையில் அகப்பட்ட படகுகளைத் தள்ளிக்கொண்டு சம்பவம் நடந்த இடத்துக்கு விரைந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர் என்றும் அந்தப் பெண் கூறினார்.

இதுவரை இச்சம்பவத்தில் காயமுற்ற 53 பேர் உயிருடன் மீட்கப்பட்டு மொரூணி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அவர்களில் மூன்று அல்லது நான்கு பேரே நடக்கக் கூடிய நிலையில் இருந்தனர். அவர்களும் இச்சம்பவத்தால் கடும் அதிர்ச்சி அடைந்தவர்களாகக் காணப்பட்டனர். மீட்கப்பட்ட ஏனையோர் படுகாயமடைந்து காணப்பட்டனர்.

இதுவரை 90 சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

நொருங்கிய விமானத்தின் பல பகுதிகள் கடல் மட்டத்துக்கு மேல் வெளியே தெரிந்து கொண்டிருப்பதாகவும் —

விமானம் நொருங்கியதால் மயக்கமுற்ற மேலும் சிலர் இன்னும அந்தப் பகுதிகளில் இருக்கக் கூடும் எனவும் —

கொமறோஸ் தீவுகளில் இருந்து ரோய்ட்டர் செய்தியாளர் தெரிவித்தார்.

உயிருடன் மீட்கப்பட்டவர்களில் விமானக் கடத்தல்காரர்களும் அடங்குவர் என கொமறோஸ் பிரதமர் அந்நாட்டு வானொலியில் அறிவித்தார். ஆனால் அவர்கள் எத்தனை பேர் என்ற விவரத்தை அவர் வெளியிடவில்லை.

உயிர் தப்பியோரில் விமானியும், விமானச் சிப்பந்தி ஒருவரும் அடங்குவர்.

இந்த விமானத்தில் இருந்தவர்களில் எதியோப்பியா கென்யா நாடுகளுக்கான ஹங்கேரி தூதுவரும் ஒருவராவார்.

அவர் எதியோப்பிய ஜனாதிபதியிடம் தனது நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்த பின்னர் நைரோபிக்கு திரும்பிக் கொண்டிருந்தார்.

(உ-ரி-3)

## விமானத்தைக் கடத்திய இருவர் மீட்கப்பட்டு கைது!

எதியோப்பிய ஏயர்லையன்ஸ் சேவைக்குச் சொந்தமான— கடத்தப்பட்ட— 'போயிங்-747' ரக விமானம் கடலில் வீழ்ந்து நொறுங்கிய பின்னர் தண்ணீரிலிருந்து மீட்கப்பட்டவர்களில் விமானத்தைக் கடத்திய நபர்களும் இருந்ததாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தில் தலைக் காயங்களுடன் உயிர்தப்பிய விமானியும், துணை விமானியும், விமானத்தைக் கடத்தியவர்களில் இருவரை அடையாளம் காட்டினர்.

இதனை அடுத்து அவர்கள் இருவரையும் கொம்மறோங் பொலீஸார் கைது செய்ததாக அறிவிக்கப்பட்டது.

## ஜெயின்கமிஷன் முன் வரதராஜப்பெருமாள்?

லண்டன், நவ. 25

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலையின் பின்னணியில் அரசியல் சதி இருந்ததா என்பது குறித்து விசாரணை நடத்திவரும் ஜெயின் கமிஷன் முன் முன்னாள் வடக்கு - கிழக்கு மாகாண சபை முதல்வர் வரதராஜப் பெருமாளும் இந்தியாவின் முன்னாள் உள்துறை அமைச்சர் எஸ். பி சவானும் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

வரதராஜப் பெருமாள் முன்பு இந்திய அரசின் பாதுகாப்பில் இருந்தார்.

இப்போது அவர் எங்கிருக்கிறார் என்பது தெரியவில்லை என பீ.பி ஸி. குறிப்பிட்டது.

(உ-3)

## ஜனாதிபதி கிளின்ரன் தாய்லாந்து விஜயம்

பாங்கொக், நவ. 25

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் தாய்லாந்தின் தலைநகர் பாங்கொக்கு குறுகியகால விஜயம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

ஆசியாவில் அமெரிக்கா கொண்டுள்ள அக்கறையை எடுத்துகாட்டும் வகையில் இந்த விஜயம் அமையும் என்று தாய்லாந்தில் உள்ள அமெரிக்க அதிகாரி தெரிவித்தார்.

ஜனாதிபதி கிளின்ரன் இன்று இரவு பாங்கொக் போய்ச் சேர்வார். அங்கு 27 மணித்தியாலம் தங்கியிருப்பார்.

27 ஆண்டுக்குப் பின் அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் முதல் தடவையாக இன்று தாய்லாந்துக்கு விஜயம் செய்கிறார்.

(உ-3)

### உலக அரங்கில்

### திருமலை லிங்கநகரிலிருந்து

# 241 தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன!

திருகோணமலை, நவ. 25

திருகோணமலை லிங்கநகரில் குடியிருந்த 241 தமிழ்க் குடும்பங்கள் இராணுவத்தினரால் கடந்த வெள்ளிக்கிழமை வெளியேற்றப்பட்டன'

திருகோணமலை 'பிளாண்டன் பொயிண்ட்' பகுதியில் அமைந்துள்ள இராணுவ, கடற்படை முகாம்களுக்கு அச்சுறுத்தலாக இந்த தமிழ்க் குடும்பங்கள் உள்ள காரணத்தால் அவர்களை அங்கிருந்து வெளியேற்ற வேண்டி ஏற்பட்டதாக இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

வெளியேற்றப்பட்ட இவர்கள் சனியன்று லிங்கநகர் சந்தியில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தனர். சுவரொட்டிகளும் அங்கு ஒட்டப்பட்டிருந்தன.

தமது பூர்வீக காணிகளில் மீளக்குடியேற தங்களை அனுமதிக்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

லிங்கநகரில் இன்னமும் தங்கியுள்ள இரு குடும்பங்களும் அடுத்தமாதத்துக்குள் வெளியேற்றப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

லிங்கநகரில் இருந்து தமிழ்க் குடும்பங்கள் வெளியேற்றப்படுவதை நிறுத்துமாறு ஈ.பி.டி.பியின் எம்.பிக்கள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் சந்திரானந்தா டி. சில்வாவிடம் நேரடியாகக் கேட்டதும்—

நியாயமான நடவடிக்கையை மேற்கொள்வதாக அவர் அப்போது உறுதியளித்ததாக செய்திகள் வெளியானதும் — தெரிந்தவையே.

(உ-3-150)

## ஆசிரியரின் லீவு நாள்கள்: குறைப்பது குறித்து ஆராய்வு

கொழும்பு, நவ. 25

பாடசாலை ஆசிரியர்களின் லீவைக் குறைப்பது பற்றி ஆராய்வதற்காக விசேட குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்திருக்கின்றார்.

பாடசாலை ஆசிரியர்களுக்கு 'ரியூசன்' வகுப்புகள் நடத்துவதற்கான அனுமதியை வழங்குவதா இல்லையா என்பது பற்றியும் இந்த விசேட குழு ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலை ஆசிரியர்களாகப் பணியாற்றும் சுமார் இரண்டு இலட்சம் பேரும் அரசாங்க சேவையில் உள்ளவர்களில் அதிக சலுகைகளைப் பெறுபவர்கள் எனவும்—

ஆனால் அவர்களில் சிலர் தங்கள் கடமைகளை உரிய விதத்தில் நிறைவேற்றாததால் ஆசிரியர்களின் லீவைக் குறைக்க வேண்டும் என மூன்று மாதங்களுக்கு முன்னர் கல்வி மான்களால் அரசுக்கு எடுத்துக் கூறப்பட்டது எனவும்—

கொழும்புப் பத்திரிகை இன்று தெரிவித்தது. (உ-10)

## மீளக்குடியேறியோருக்கான ரூ. 5 ஆயிரம் விரைவில்

யாழ். பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியேறியோருக்கு மீளக்குடியமர்தல், தொழில் முயற்சிக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா விரைவில் வழங்கப்படவிருப்பதாக பிரதேச செயலர் க. குணராசா தெரிவித்தார்.

ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் அந்தப் பகுதி கிராமசேவையாளர் தலைமையில் ஆலோசனைச் சபை உறுப்பினர்களைக் கொண்ட குழு இக்கொடுப்பனவு வழங்கத் தகுதியானவர்களை தெரிவு செய்யும் வகையில் மதிப்பீட்டு வேலைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த மதிப்பீட்டு வேலைகள் பூர்த்தியானதும் கொடுப்பனவுகள் அவரவர் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்படும்.

இதற்கு வசதியாக வங்கிக் கணக்கு இல்லாதவர்களை வங்கிக் கணக்கை ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதேவேளை — சின்னக் கடை, குருநகர், றெக்கிளமேசன் பகுதி கிராமசேவையாளர் பிரிவுகளில் உள்ள மக்கள் வங்கிக் கணக்கை திறக்க வசதியாக மக்கள் வங்கியின் கருமபீடம் ஒன்று செண். ஜேம்ஸ் தேவாலயத்துக்கு அருகில் திறக்கப்பட்டுள்ளது என்றும் பிரதேச செயலர் தெரிவித்தார்.

(இ-3-ரி)

### பொது நிகழ்ச்சிகளில் பங்குபற்ற

## யாழ். வர வேண்டாம் என அதிகாரிகளுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணத்தில் பொது வைபவங்களில் கலந்து கொள்ள வேண்டாம் என்று அரச உயர் நிலை அதிகாரிகளுக்கு படையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர் என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்திற்கு வரும் உயர் நிலை அதிகாரிகளை விடுதலைப் புலிகள் தாக்க திட்டமிட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்,

யாழ். மாவட்டத்தில் நடக்கவிருந்த வைபவம் ஒன்றுக்கு வரவிருந்த, உயர்நிலை அதிகாரி, பாதுகாப்புப் படையினரின் ஆலோசனையின் பேரில் வரவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கில் காவலில் இருந்த

# முந்நூறு இளைஞர் காணாமற்போயினர்!

## ஜனாதிபதிக்கு ஜோசப் பரராஜசிங்கம் கடிதம்

லண்டன், நவ. 25

'வட பிரதேசத்தில் இராணுவக் காவலில் வைக்கப்பட்ட சுமார் முந்நூறு இளைஞர், யுவதிகள் காணாமல் போயிருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். இக்கடிதம் தொடர்பாக பி.பி.ஸிக்கு அவர் வழங்கிய பேட்டியின் விவரம் வருமாறு:

கேள்வி: மேற்படி குற்றச்சாட்டுகளுக்கு உங்களிடம் என்ன ஆதாரங்கள் உள்ளன.

பதில்: யாழ்ப்பாணத்திலிருந்து தினசரி எனக்கு நான்கு, ஐந்து கடிதங்கள் வந்த வண்ணம் உள்ளன. ஒவ்வொன்றும் காணாமற் போனோர் விவரத்தையே தெரிவிக்கின்றது. இளைஞர் யுவதிகள் கைது செய்யப்படுவதும், அது குறித்து சம்பந்தப்பட்ட இராணுவ நிலையத்தில் கேட்டால் அப்படி ஒருவரைக் கைது செய்யவில்லை என்று பதிலளிக்கப்படுவதும் அக்கடிதங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒக்ரோபர் முதல் வாரத்தில் காணாமல் போன சாதாரண தமிழ்மக்கள் ஆறு பேர் அழுகிய சடலங்களாக எழுதுமட்டுவாழ் பகுதியில் ஆழமற்ற கிடங்கில் இருந்து மீட்கப்பட்டிருக்கின்றார்கள்.

இத்தகைய நிகழ்வுகள் அங்கு சகஜமாகவே உள்ளன. இவ்வாறு கைது செய்யப்பட்டு இராணுவக் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்த சுமார் முந்நூறு பேர் காணாமற் போயிருப்பதாகத் தெரியப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இது தவிர 24 பேரின் பெயர்ப் பட்டியல்கள் அவர்கள் எங்கு யாரால் எப்போது கைது செய்யப்பட்டார்கள் அது பற்றிய தகவல்களைத் தந்தோர் ஆகியவற்றை விளக்கமாகக் குறிப்பிட்டு அந்தச் சம்பவங்கள் குறித்து விசாரணை நடத்துமாறு கோரி ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருக்கின்றேன்.

கேள்வி: ஜனாதிபதியிடமிருந்து எப்படிப்பட்ட பதிலை எதிர்பார்க்கின்றீர்கள்?

பதில்:- பல விடயங்கள் குறித்து கேட்டு எழுதும் போது சாதாரணமாக பதிலே கிடைப்பதில்லை; சில வேளைகளில் அறிக்கை விடுக்கின்றார்கள்; சில சந்தர்ப்பங்களில் நடவடிக்கை எடுக்கின்றார்கள்.

கைது செய்யப்பட்டு பல வருடங்களாக களுத்துறை, மகஸின் சிறைச்சாலைகளில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கின்றார்கள், அது போன்ற நடவடிக்கை இந்த விடயத்திலும் அவசியம் எனக் கருதுகின்றேன்.

(உ-ரி)


உங்கள் பிள்ளைகளின்
உயர்ந்த எதிர்காலத்திற்கு
எம்முடன் இணையுங்கள்

ESTD:-1973 REGD:-No J/7993

**The Express Institute**

IRUPALAI - KOPAY.

★ ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த கட்டமைப்பு
★ அனுபவம் முதிர்ந்த ஆசிரியகுழு
★ விடுமுறை கால மேலதிக வகுப்புகள் மூலம் பழையன மீட்டல்
★ மாதாந்த பரீட்சைகள் மூலம் மீட்டல்

**கல்வி ஆண்டு 97க்கான புதிய வகுப்புகள் டிசம்பர் 05ல் ஆரம்பமாகின்றன**

இன்று முதல் புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(43795) - அதிபர்


31ஆம் நாள்

### நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



மலர்வு: 21 — 12 — 1918

உதிர்வு: 26 — 10 — 1996

திருமதி

### கெங்காதேவி சிவராமலிங்கம்

(பேபி)

மாநிலத்தில் வாழ்வதற்கும் வணிகம் செய்து
மக்களையும் மாண்புடனே போற்றிக் காத்து
நல்லவளாய் வல்லவளாய் நாடுபோற்ற நடந்தீரே!
நல்லவர்கள் பக்கம் சார்ந்து
வாழ்ந்தது தான்போதுமென்றா எமைவிட்டுச்சென்றீர்
வாடுகின்றோம் தேடுகின்றோம் அம்மாவே!
உம்மை இயற்கை இது மாறாது என்று நாம்தேறி
இறையடியில் சேர்வதற்கு இறைஞ்சுகின்றோம் நாளும்.

எமது அருமை அம்மாவின் 26-10-1996 இல் நடந்த மரணச் சடங்கில் பங்கு கொண்டு அனுதாபச் செய்திகள் அனுப்பிய உறவினர், நண்பர்களுக்கும் பிந்திய நாள்களில் வீட்டுக்கு வந்தவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றியை தெரிவிக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''சிவகெங்கா'',
கச்சாய் றோட், கொடிகாமம். (43766)

## அடுத்த ஆண்டுக்கான பொது விடுமுறை தினங்கள்

வலிகாமம் தெற்கு, நவ. 25

1997 ஆம் ஆண்டுக்கான பொது விடுமுறைத் தினங்கள் பற்றி பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

பின்வரும் தினங்கள் 1997 ஆம் ஆண்டுக்கான அரச, வர்த்தக வங்கி பொது விடுமுறை தினங்களாக இருக்கும்.

★ ஜனவரி 14 செவ்வாய் — தைப்பொங்கல்.
★ ஜனவரி 23 வியாழன் — பௌர்ணமி தினம்.
★ பெப்ரவரி 4 செவ்வாய் — தேசியதினம்.
★ பெப்ரவரி 9 — ஈதுல் பித்ர்
★ பெப்ரவரி 21 வெள்ளி - பௌர்ணமி தினம்
★ மார்ச் 23 ஞாயிறு — பௌர்ணமி தினம்.
★ மார்ச் 28 வெள்ளி — பெரிய வெள்ளி.
★ ஏப்ரல் 13 ஞாயிறு — தமிழ், சிங்கள புத்தாண்டு முன்தினம்.
★ ஏப்ரல் 14 திங்கள் — தமிழ், சிங்கள புத்தாண்டு தினம்.
★ ஏப்ரல் 22 செவ்வாய் — பௌர்ணமி தினம்.
★ மே 1 வியாழன் — மே. தினம்
★ மே 21 புதன் — வெசாக் நோன்மதி
★ மே 22 வியாழன் — வெசாக் நோன்மதி மறுதினம்
★ ஜூன் 20 வெள்ளி — பௌர்ணமி தினம்
★ ஜூலை 18 வெள்ளி — மீலாத்துன் நபி பிறந்த தினம்.
★ ஜூலை 19 சனி — பௌர்ணமி தினம்.
★ ஓகஸ்ட் 18 திங்கள் — பௌர்ணமி தினம்.
★ செப்ரெம்பர் 16 செவ்வாய் — பௌர்ணமி தினம்.
★ ஒக்ரோபர் 15 புதன் — பௌர்ணமி தினம்.
★ ஒக்ரோபர் 30 வியாழன் — தீபாவளி.
★ நவம்பர் 14 வெள்ளி — பௌர்ணமி தினம்.
★ டிசம்பர் 13 சனி — பௌர்ணமி தினம்.
★ டிசம்பர் 25 வியாழன் — நத்தார் தினம்.
★ மார்ச் 7 வெள்ளி — சிவராத்திரி (இந்து சமயத்தவர்களுக்கு).
★ ஏப்ரல் 18 திங்கள் — ஹஜ்ஜூம் பெருநாள் (முஸ்லிம் சமயத்தவர்களுக்கு).

(இ-152)

## தேடுதலில் ஆயுதங்களை கைப்பற்றியதாக அறிவிப்பு

கொழும்பு, நவ. 25

வடபகுதியில் மேற்கொண்ட தேடுதலின்போது பாதுகாப்புப் படையினர் புலிகள் பயன்படுத்திய வாகனங்கள், ஆயுதங்கள் ஆகியவற்றை கைப்பற்றினர் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

றோசா பஸ் ஒன்று, ஸ்கூட்டர் ஒன்று, மோட்டார் சைக்கிள் ஒன்று 6) மி மீ. சக்தி வாய்ந்த 20 மோட்டார் குண்டுகள், 47 கைக்குண்டுகள், 3 அமுக்க வெடிகள், 5 கிளைமோர் கண்ணி வெடிகள், நூற்றுக்கு மேற்பட்ட சுற்றுத் தோட்டாக்கள் ஆகியன கைப்பற்றப்பட்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## இடத்துக்கிடம் மாறுபடும் பரீட்சைக் கட்டணம்!

யாழ்ப்பாணம், நவ. 25

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி. சீ. ஈ (சாதாரண) பரீட்சைக்கு முன்னோடியாக கல்வித் திணைக்களத்தால் நடத்தப்படவிருக்கும் பொதுப்பரீட்சைக்கு வெவ்வேறு விதமான கட்டணங்கள் அறவிடப்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பிரதேச செயலக பிரிவு ஆலோசனைக் கூட்டத்திலேயே இந்த முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பரீட்சைக்கு கட்டணமாக வலயம் ஒன்றில் 60 ரூபாவும், வலயம் இரண்டில் 35 ரூபாவும் அறவிடப்படுவதாக இக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

(இ-3-ரி)

## கும்பிடப் போன வயோதிபரை காணவில்லை

போலிய கொடை பிள்ளையார் கோயிலுக்கு வழிபடச் சென்ற புங்குடுதீவைச் சேர்ந்த 67 வயதான துரைராஜா என்பவரைக் காணவில்லை என்று கிரான்பாஸ் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நவகம்புர வீடமைப்புத் திட்டத்தில் வசித்து வந்த இவர் போலிய கொடை பிள்ளையார் கோயிலுக்கு வழிபடச் சென்று இரு நாள்களாக வீடு திரும்பாததை யடுத்து பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

(உ-3-150)


"ஜெயா கேக் ஐசிங் நிறுவனம்"

மிகக் குறுகிய காலத்தில் பயிற்சி நெறிகள் ஆரம்பமாக உள்ளன. மாணவர்களின் வசதிக்கு ஏற்றவாறு ஒழுங்கு செய்து தரப்படும்.

விவரங்களுக்கு:
திருமதி R.S.தேவராஜா
இல. 7, கற்குளி ஒழுங்கை,
சாவகச்சேரி.
(இ/3612)



**RADIO ELECTRONICS**

RADIO, T. V & DECK இவற்றுடன் ELECTRONICS அறிவியலையும் அடக்கிய புதிய பயிற்சி நெறி

ஆரம்பம்
வார நாள் 29-11-96
வார இறுதி நாள் 30-11-96
காலம் 4 மாதங்கள்
செய்முறைப் பயிற்சியுடன் கூடியது.

விவரங்களுக்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE,**
2nd, CROSS STREET, JAFFNA.
(43788)



**COMPUTER PROGRAMMING**
IN
**BASIC LANGUAGE**
&
**DISK OPERATING SYSTEM**
(3 MONTHS)

இவற்றுடன்
WORD STAR, LOTUS 1-2-3,
WORD PERFECT, DATA BASE

ஆரம்பம்:
வாரநாள் வகுப்புகள்: 29-11-96
வார இறுதிநாள் வகுப்புகள்: 30-11-96

விவரங்கட்கு:
**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
2 nd CROSS STREET,
JAFFNA.
(43787)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் பொது நூலகம்

# தலைவருக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுக்க முடியாத பழைய மாணவர் சங்கம்

## கல்வித் திணைக்கள சுற்றறிக்கையால் வினோதமான நிலை

பழைய மாணவர் சங்கங்களுக்குப் புறம்பாக பாடசாலைகளின் புறநடவடிக்கைகளில் முக்கியமாகப் பங்கு கொள்ளும் மற்றுமொரு அமைப்பு ''பாடசாலை அபிவிருத்திச் சங்கம்'' ஆகும்.

முன்னர் செயற்பட்டு வந்த ''பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள்'' இல்லாதொழிக்கப்பட அந்த இடத்துக்கு சட்ட ஏற்பாடுகள் மூலம் ''பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள்'' அறிமுகப்படுத்தப்பட்டன.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைப் பொறுத்தவரை அதன் செயற்பாடுகள், நிதி முகாமைத்துவம் போன்றவை திட்டவட்டமான சட்ட ஏற்பாடுகள் மூலம் வரையறை செய்யப்பட்டு, ஒழுங்கான கண்காணிப்பு நடைமுறைகளுக்கும் வழி செய்யப்பட்டிருக்கின்றன.

அதன் தலைவராக பாடசாலை அதிபரே இருக்க முடியும்; பொருளாளராக பாடசாலை ஆசிரியரே தெரிவு செய்யப்பட முடியும்.

இது தவிர, அதன் நிதி முகாமைத்துவம் தொடர்பாக—

சங்கத்தின் ஒவ்வொரு சதத்துக்குமான செலவுக்கும் கண்காணித்து, கட்டுப்படுத்தி, விசாரணை நடத்தி, கேள்வி எழுப்பி, உரிய நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் கல்வித்திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருக்கின்றது. ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு மேற்பட்ட எந்தக் கொடுப்பனவையும் கல்வித் திணைக்களத்தின் அனுமதி இல்லாமல் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மேற்கொள்ள முடியாது; அதற்குக் குறைந்த தொகைக்கு செலவுகளைச் செய்தாலும் அவற்றுக்கு செலவுக்குப் பின்னான அனுமதியை கல்வித் திணைக்களத்திடம் பெற்றாக வேண்டும்.

இது மட்டமல்லாமல் தொண்டர் ஆசிரியர் கொடுப்பனவு, கதிரை—மேசை செய்தல் போன்ற வழமையான நடவடிக்கைகளுக்கு எக்காரணம் கொண்டும் கல்வித் திணைக்களம் நிர்ணயித்துள்ள அடிப்படைக் கொடுப்பனவு அளவுக்கு மிஞ்சி மேலதிக கொடுப்பனவை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வழங்க முடியாது.

இத்தகைய இறுக்கமான நிதி முகாமைத்துவக் கட்டுப்பாடுகளை வைத்திருப்பதால் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக— பதவி வழியாக— அதிபரே நியமிக்கப்பட்டாலும்—

அவரின் கண்காணிப்பின் கீழ் இடம்பெறும் சங்கத்தின் நிதி முகாமைத்துவத்தில் ஊழல் ஏதும் இடம்பெற்றாலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் கல்வித் திணைக்களத்துக்கு இருக்கின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவரான அதிபர், அந்தச் சங்கத்தில் நிதி மோசடியில் அல்லது ஊழலில் ஈடுபடுகின்றார் என சங்கத்தின் பொதுச்சபை கருதினால் அல்லது சந்தேகித்தால் அது குறித்து கல்வித் திணைக்களத்திடம் முறையிடவும் —

அத்தகைய முறைப்பாட்டை விசாரித்து அது உண்மையானால் அதிபருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் —

அபிவிருத்திச் சங்கங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் மூலம் கல்வித் திணைக்களம் அதிகாரம் பெற்றிருக்கின்றது.

> பாடசாலைகளின் பழைய மாணவர் சங்கங்கள் தொடர்பாக குடா நாட்டின் கல்வி வட்டாரங்களில் எழுந்திருக்கும் சர்ச்சையில் ஒரு பக்கத்தைத் தெளிவுபடுத்தும் இக் கட்டுரைத் தொடரின் மூன்றாவது—இறுதி — அங்கம் இன்று பிரசுரமாகின்றது. இப் பிரச்சினை தொடர்பாக வாசகர்கள் மற்றும் கல்விமான்கள் தெரிவிக்கும் கருத்துக்கள் அவ்வப்போது பிரசுரமாகும். (ஆ—ர்)

### தெளிவற்ற சுற்றறிக்கை

ஆனால் பழைய மாணவர் சங்கங்கள் தொடர்பான சுற்றறிக்கையில் —

''பொறுப்புக்கூறு தலையும், ஒத்துழைப்பையும் மேலும் உறுதிப் படுத்துவதற்காக அப்பாடசாலை அதிபரே பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது'' — என மொட்டையாகக் கூறப்பட்டிருக்கின்றதே தவிர —

நிதி முகாமைத்துவம், கண்காணிப்பு போன்றவை தொடர்பான திட்டவட்டமான ஏற்பாடுகள் ஏதும் இல்லை.

அதாவது, பழைய மாணவர் சங்கத்தின் யாப்பை — பாடசாலை அதிபரே தலைவராக வரக்கூடியதாகவும் —

அதிபரே சங்கத்தின் நிதி முகாமைத்துவத்துக்குப் பொறுப்புடையவராக இருப்பதால் காசோலைகளுக்கு கையொப்பதாரிகாய் அவர் இருக்கக் கூடியதாகவும் —

மாற்றும்படி கோரப்பட்டுள்ளது. ஏனைய விடயங்களில் சங்கம் தனது பழைய யாப்பு விதிகளைப் பின்பற்றலாம் என்பதே பொருள்.

அதை விரித்துக் கூறுவதானால் —

சங்கத்தின் நிதி விவகாரம் தொடர்பான சகல விடயங்களையும் கண்காணித்து வழி நடத்தும் பொறுப்பு முன்பிருந்தது போன்று தொடர்ந்தும் சங்கத்துக்கே உரியது; ஆனால் அதை நிறைவேற்றுகின்ற அதிகாரம் பதவி வழியாக அதிபருக்கே இருக்கும்.

முரண்பாடு வந்தால் என்ன செய்வது?

சரி. இதனை அப்படியே ஏற்றுக் கொண்டால் —

### பகுதி - 3

சங்கத்தின் முடிவுக்கு மாறாக சங்கத் தலைவரான அதிபர் நிதியைக் கையாண்டால் அல்லது ஊழலில் ஈடுபட்டால் சங்கம் என்ன செய்வது? அத்தகைய தலைவரின் செயற்பாட்டுக்கு எதிராக— உரிய நடவடிக்கை எடுக்க— சங்கம் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினாலும் அதிபரே பதவி வழியாக தலைவராக இருப்பதால் அவருக்கு எதிரான அந்த நடவடிக்கையை எவ்வாறு நடைமுறைப்படுத்த முடியும்?

இத்தகைய சந்தர்ப்பத்தில் கல்வித் திணைக்களத்திடம் ஆதாரங்களோடு சென்று முறையிட்டால் உரிய நிவாரணம் கிடைக்கும்தானே என்று சிலர் வாதிக்கக்கூடும்.

ஆனால் பழைய மாணவர் சங்கத்தின் நிதி விவகாரங்களை கண்காணித்து, விசாரணை நடத்தி, முடிவு செய்யும் அதிகாரம் ஏதும் எந்தச் சட்டத்தின் மூலமும் — எந்தச் சுற்றறிக்கை மூலமும் — கல்வித் திணைக்களத்துக்கு இன்னமும் வழங்கப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

### கல்வித் திணைக்களம் பொறுப்பாகுமா?

அதிபரே பழைய மாணவர் சங்கத்தின் தலைவராக வர வேண்டும் என்ற சுற்றறிக்கை வந்திருப்பதால் —

சங்கத்தின் காசோலைகளுக்கு கையொப்பதாரியாய் அதிபரே இருப்பதால் —

சங்கத்தின் நிதி விவகாரங்களுக்கு கல்வித் திணைக்களம் பொறுப்புடையதாகி விடுகின்றது என்று கூறிவிட முடியாது.

எனவே, பழைய மாணவர் சங்கத்தின் நடவடிக்கைகள், செயற்பாடுகளை சங்கம் செய்யலாம். ஆனால் சங்கத்தின் நிதி முகாமைத்துவத்தில் சங்கத்தின் அதிகாரம் கேள்விக் குறியாய் இருக்கும். நிதி முகாமைத்துவத்துக்குரிய அதிகாரம் பாடசாலை அதிபரிடமே இருக்கப் போகிறது. அவர் பதவி வழியாக சங்கத்தின் தலைவராக இருப்பதால் தனது சங்கத்தின் தலைவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாத — அல்லது நடவடிக்கைக்கான தீர்மானம் ஒன்றை எடுத்தாலும் அதனை நடைமுறைப்படுத்த முடியாத — நிலையில் சங்கம் இருக்கும்.

இதுதான் கல்வித் திணைக்கள சுற்றறிக்கை தோற்றுவித்திருக்கும் வினோதமான நிலை.

இத்தகைய இக்கட்டான நிலை பழைய மாணவர் சங்கங்களில் குழப்பத்தையும், குளறுபடிகளையும் தோற்றுவிக்குமே ஒழிய, சுதந்திரமான — சுயாதீனமான — செயற்பாட்டுக்கு வழிவகுக்க மாட்டாது.

### சுதந்திர அமைப்பு அவசியமானது

அது மட்டுமல்லாமல் —

பாடசாலையின் நலன்கருதி சாதாரண சட்ட, திட்டங்களுக்கு அப்பால்சென்று சிலநடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்படும் போது, அவற்றைச் செயற்படுத்த அரசாங்க மற்றும் கல்வித் திணைக்கள கட்டுப்பாடுகளுக்கு அப்பால் — சுதந்திரமாக — சுயாதீனமாக — செயற்படும் ஓர் அமைப்பு பாடசாலைகளுக்கு தேவைப்படுகின்றது. அந்தத் தேவையை பழைய மாணவர் சங்கங்களே இதுவரை ஆற்றி வந்துள்ளன.

வெளியில் இருந்து நல்ல — தரம்மிக்க — ஓர் ஆசிரியரின் சேவை பாடசாலைக்குத் தேவைப்படும் போது அத்தகைய சேவையை பழைய மாணவர் சங்கங்கள் மூலமே பாடசாலைகள் பெற்று வந்தன என்பது எமக்கு நன்கு தெரிந்த விடயமாகும்.

சிறப்பான — தேர்ந்த — இத்தகைய ஆசிரியர்களின் சேவையை, கல்வித் திணைக்களம் நிர்ணயித்துள்ள கொடுப்பனவுத் தொகையில் பெற்றுக் கொள்ள முடியாது; அதிக கொடுப்பனவுகளை வழங்கியே அவர்களின் சேவையைப் பெறமுடியும். ஆனால் பழைய மாணவர் சங்கங்கள் கல்வித்திணைக்களக் கட்டுப்பாட்டின் கீழ் வந்து விட்டால் இத்தகைய சேவையை பாடசாலைக்குப் பெற்றுக் கொடுக்க முடியாத நிலையே ஏற்படும்.

## சேது

### மற்றுமோர் உதாரணம்

உதாரணத்துக்கு மற்றும் ஒன்று.

பாடசாலையை அண்டிய தனியார் காணி அல்லது காணிகள் பாடசாலைக்கு அல்லது படசாலை மைதானத்துக்கு தேவைப்படுவதாக வைத்துக் கொள்வோம்.

அதனை பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் ஊடாக அல்லது அரச திணைக்களத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் அது போன்ற ஓர் அமைப்பின் ஊடாக நாம் கொள்வனவு செய்ய முயற்சித்தால் —

அரச நில மதிப்பீட்டாளர் மதிப்பிடும் தொகைக்கு கூடிய தொகையை காணிக்காரர்களுக்கு வழங்க முடியாது.

ஆனால் நாட்டில் உள்ள நிலைமையில் அரச அதிகாரிகள் மதிப்பிடும் தொகைக்கு (வழமையாக அது சந்தைப் பெறுமதியிலும் மிகக் குறைவாக இருக்கும்) காணியை விற்க எந்த உரிமையாளரும் முன் வரமாட்டார்கள்.

இவ்வாறு பாடசாலைக்கு பயனுள்ள பல காணிகளை பழைய மாணவர் சங்கங்கள் காணி உரிமையாளர்களுடன் கலந்து பேசி, பாடசாலைக்கும் காணி உரிமையாளர்களுக்கும் நீதியான ஒரு விலையைத் தீர்மானித்து, தமது சங்கங்கள் ஊடாகக் கொள்வனவு செய்து பாடசாலைக்கு வழங்கியிருக்கின்றன.

ஆனால் சங்கம் பதவி வழியாக அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் சென்று —

அதன் மூலம் கல்வித் திணைக்களத்தின் வழி நடத்துகைக்கு உட்பட்டால் —

இத்தகைய நற்பணிகளைச் செய்ய முடியாமல் போய் விடும்.

### கல்வி நிர்வாகிகளின் சரியான பதிலை சமூகம் எதிர்பார்க்கிறது

எனவே வெறும் சுற்றறிக்கை ஒன்றை மட்டும் செயற்படுத்த எண்ணாமல் —

பழைய மாணவர் சங்கம் போன்ற புற அமைப்புகளால் பாடசாலை நிர்வாகத்துக்கு வரக் கூடிய சிக்கல்களை ஒரேயடியாக நீக்கி விடலாம் என்ற ஒரே எண்ணத்துடன் —

இந்தச் சுற்றறிக்கையை நடைமுறைப்படுத்த தீவிரமும் அவசரமும் காட்ட வேண்டாம் என்பதே கல்வி நிர்வாகிகளுக்கு எமது பணிவான வேண்டுகோள்.

சுற்றறிக்கை வெளியாகி ஏற்கனவே ஒன்றரை வருடமாகிவிட்டது. இதுவரை வாளாவிருந்து விட்டு இப்போது திடீரென அதனை நடைமுறைப்படுத்த அவசரம் காட்டாது —

சம்பந்தப்பட்ட அனைவரையும் அழைத்து, நன்கு ஆலோசித்து உரிய முடிவுகளை மேற்கொள்ளும்படி கல்வி நிர்வாகிகளை வேண்டுகிறோம்.

மேலிடத்து உத்தரவுகளை செயற்படுத்துகின்றோம் என்று சமாதானம் கூறிக் கொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் எனவும் —

எமது சமூக, கள நிலைகளுக்கு ஏற்ப சமூகத்துடன் இணைந்து பிரச்சினைகளை ஆராய்ந்து முடிவெடுக்கும்படியும் —

இவ்விவகாரம் குறித்து சமூகத்துக்கு தங்கள் பதிலைத் தெளிவாக வெளிப்படுத்தும்படியும் —

யாழ். கல்விச் சமூகத்தின் சார்பில் வேண்டுகிறோம்.

★

---

# வன்னி விவசாயிகளுக்கு வரட்சி நிவாரணம்

வன்னிப்பகுதியில் கடுமையான வரட்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் 19 ஆயிரத்து 66 விவசாயக் குடும்பங்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கப்படஉள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சுகாதார, சமூக சேவைகள், நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ. எச். எம். பௌசி தமது அமைச்சு அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பி. நீலன் திருச்செல்வம் அண்மையில் நாடாளுமன்றத்தில் வன்னிமக்களின் பிரச்சினை பற்றிப் பேசுகையில், வரட்சி நிவாரணம் விவசாயிகளுக்கு வழங்கப்படவில்லை என்று கூறினார்.

இதையடுத்தே அமைச்சர் பௌசி இந்த பணிப்புரையை விடுத்துள்ளார். (இ-3)

# பாடசாலை நேரம் 'ரியூசன்' செல்லும் மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை

## கல்வி அமைச்சு அறிவிப்பு

"பாடசாலையில் வகுப்பு நடைபெறும் நேரங்களில் தனிப்பட்ட ரீதியில் நடத்தப்படும் ரியூசனுக்குச் செல்லும் மாணவர்கள் பாடசாலையில் இருந்து விலக்கப்படுவார்கள்.'

இப்படி கல்வி, உயர் கல்வி அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்த அமைச்சு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது;

இத்தகைய மாணவர்கள் மீது மட்டுமல்ல, பாடசாலை நேரங்களில் தனிப்பட்ட வகுப்புகளை நடத்தும் ஆசிரியர்களுக்கு எதிராகவும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றைக் கண்காணிக்க விசேட குழுக்களும் நியமிக்கப்படவிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

ஓடும் நிலையிலுள்ள 3 சிறி A30 பரினா மொடல் காரும், Honda, 1500 W ஜெனரேட்டரும், Robin Ey 20 புதியது மற்றும் வீட்டுத்தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:- V. V. T. சிவா, ''பிரசோ போட்டோ'' புஸ்ப இல்லம், நுணாவில் மேற்கு. (43789)

கேபிள் பிரேக் பெண்கள் துவிச்சக்கர வண்டி ரூபா 2150/- மட்டும் (64) 404 மணிக்கூட்டு வீதி, (புட்டு சந்தி), பெருமாள் கோயிலடி யாழ்ப்பாணம். (43793)

### தவறிவிட்டது

மந்திகைக்கும், வறணிக்கும் இடையில் முக்கிய ஆவணங்களுடன் திருமதி T. இராஜேஸ்வரி அல்வாய் என விலாசமிடப்பட்ட பல புத்தகங்களுடன் குடும்ப அல்பம் அடங்கிய பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் T. சிவா, புஸ்ப இல்லம், நுணாவில் மேற்கு எனும் முகவரியில் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (43790)

### அக்கரைச் சீமையில்

அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நாடகங்களை வானொலியில் கேளுங்கள். நூலை வாங்கி நாவலை வாசியுங்கள். துன்பம் சூழும் போது உங்களை மறந்து வேறு உலகில் சஞ்சரிக்கலாம். மலிவு விலை ரூபா 25/-. (43613)

## மட்டக்களப்பில் தேடுதல்

மட்டுநகர் பகுதியில் கடைகள், வீடுகள் ஆகியவற்றில் பொலீஸார் வெள்ளியன்று தேடுதல் நடத்தினார்கள்.

பிரதான வீதி, அன்ரனி வீதி ஆகிய பகுதிகளில் எவராவது ஊடுருவியிருக்கிறார்களா என்பதை அறியவே இத்தேடுதல் இடம்பெற்றது. (இ-3-150)

## வைத்தியம்

எனது தொய்வு-மூட்டு நோயாளர்கள் தங்களது சகல மருந்துகளையும் டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம் இலக்கம் 25, சென்சில் வெஸ்டர் றோட், மவுண்ட் லேவினியா எனும் விலாசத்தில் தற்காலிகமாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் தொலைபேசி **730945** (கொழும்பு.) (43778)

## வைத்தியம்

செங்கமாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலைசால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப் போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேற்றின்மை, குழந்தை வைத்தியம், வீரியக்குறைவு, மூலவியாதிகள், மூத்திரோகங்களில் பிரபலமானவர்; சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
சி. இராசரத்தினம்
121, 2ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

[43460]

## QUICK PHOTO வின் வாராந்த துரித சேவை

எம்மிடம் தந்த கலர்ப்பிலிம் றோல்கள் கொழும்பில் கழுவி வந்துவிட்டன. உரியவர்கள் கீழ்க்காணும் முகவரியில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

27-11-96 புதன்கிழமை கொழும்பு செல்ல இருப்பதால் வாடிக்கையாளர்கள் தங்கள் படச்சுருள்களை செவ்வாய்க் கிழமைக்கு முன்பாகச் சேர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Quick Photo பிரதிநிதியை செவ்வாய்க்கிழமை நல்லூர் விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

வாரம் ஒரு தடவை எமது சேவை நடைபெறும்.

அஜந்தா
போட்டோ & வீடியோ,
நல்லூர் (முத்திரைச் சந்தையடி)

தவமணி
மான் ஸ்கூல் லேன்,
உடுவில்.

(43792)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்: 18 — 08 — 1979



ஆண்டவன் அடியில்: 26 — 10 — 1996

செல்வன்
**பாலசுப்பிரமணியம் செல்வகுமார்**
(கொக்குவில் நாமகள் வித்தியாலய ஆண்டு 11 மாணவன்)

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், பாசத்தின் பிறப்பிடமாய் வாழ்ந்த எங்கள் அன்புச் செல்வம் மறைந்து நாள்கள் முப்பத்தொன்றாகினாலும் உம் நினைவு என்றும் எங்கள் மனதை விட்டகலாது; உமது ஆத்மா சாந்தியடைய என்றென்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உமது நினைவுடன் வாழும்:
அம்மா, அத்தான், அக்காமார்,
அண்ணா, மருமக்கள், உறவினர்கள்.

வளாக ஒழுங்கை,
திருநெல்வேலி. (43782)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 23 — 05 — 1932



மறைவு: 07 — 12 — 1995

**அமரர் அ. இராசையா**
(இளைப்பாறிய ஊழியர்
யாழ். போதனா வைத்தியசாலை)

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
பாசத்தின் இருப்பிடமாய் பண்பின்
திருவருளாய் மக்கள் சேவையை
மாபெரும் சேவை என வாழ்ந்து
எமை அன்புடன் அரவணைத்து
இன்புற வாழ வைத்த எங்கள்
தெய்வமே கரங்கள் எமை பிரிந்து
ஓர் ஆண்டு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை தொடரும்.

இவரின் துயரில் வாடும்;
மனைவி, மக்கள்.

மீசாலை கிழக்கு,
மீசாலை. (சி-3611)

## வாடிக்கையாளர்களுக்கு

## - அல்டி -

எமது ஸ்தாபனம் தற்போது
இல. 75, பெரியகடை, யாழ்ப்பாணத்தில்
இயங்குவதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

— அல்டி

(43775)

## 31-ம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 09 — 1935



மறைவு: 26 — 10 — 1996


உயர் திரு.
**சின்னையா சுப்பிரமணியம்**
(சைவம்)

அன்பே உருவான எங்கள் அப்பா
வற்றாத பாசம் வைத்திருந்த எங்கள் மாமா
பலர் போற்றும் பண்பேயுடைய தோழா
அளவற்ற அன்புடன் அணைந்த தாத்தா
உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகிறோம் நாங்கள்.

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உடன் வாழ்ந்தோர்.

வீரப்பதிராயன்,
கரணவாய்,
கரவெட்டி. (43785)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
**சரவணமுத்து செல்லத்துரை**
(வர்த்தகர், அராலி)

தோற்றம்: **05 — 10 — 1914**
மறைவு: **08 — 12 — 1995**

அன்பிற்கும், பண்பிற்கும் உறைவிடமாய் இருந்து எங்களுக்கு எல்லாம் வழிகாட்டியாக இருந்த எங்கள் அன்புத் தந்தையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

''தர்மகிரி''
அராலி கிழக்கு,
அராலி. [43755]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைக்குண்டுகள் மீட்கப்பட்டமை பற்றி இராணுவ வட்டாரங்கள் அறிக்கை

யாழ்ப்பாணம், நவ 25

அண்மைக்காலத்தில் யாழ். நகரை அண்மித்த பிரதேசங்களில் கைக்குண்டுகள், ஆயுதங்கள் மீட்கப்பட்டமை தொடர்பாக யாழ். இராணுவ வட்டாரங்கள் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன. அந்த அறிக்கையின் யின் விவரம் வருமாறு:

புலிகளால் மறைத்து வைக்கப்பட்டுள்ள ஆயிரக் கணக்கான கைக்குண்டுகள் பல ஆயுதங்கள், துப்பாக்கி ரவைகள் போன்றவை கடந்த மூன்று, நான்கு நாள்களுக்குள் யாழ் நகரை அண்மித்த பல்வேறு பிரதேசங்களில் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

ஆயுதங்களும் ரவைகளும் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல்களை மேற்கொள்ளவும், கைக்குண்டுகள் பொது இடங்களில் தாக்குதல்களை மேற் கொள்ளவும் பயன்படுத்தப்படுவது கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இருந்து தெரிய வந்துள்ளது

கடந்த ஒன்றரை மாத காலத்தில் யாழ். நகரை அண்மித்த பிரதேசத்தில் புலிகள் மேற் கொண்ட நான்கு கைக்குண்டுத் தாக்குதல்களில் அப்பாவிப் பெண் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்; நாற்பது பொது மக்கள் காயமடைந்திருக்கின்றார்கள். கடந்த 9 ஆம் திகதி 'சலுசல' நிலையத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போதும் தீபாவளிக்கு பொருள்களைக் கொள்வனவு செய்ய வந்த பொதுமக்களைத் தவிர எந்தவொரு படை வீரரும் அங்கு இருக்கவில்லை. அப்படியாயின் எதற்காக இத்தகைய தாக்குதல்களை இவர்கள் நடத்துகின்றார்கள்? ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைக்குண்டுகளை நகரை அண்மித்த பிரதேசங்களில் மறைத்து வைப்பதற்கான காரணம் யாது?

கைக்குண்டுத் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் மட்டும் படையினரை அவர்களால் தோற்கடித்து விட முடியாது.

இதுவரை காலமும் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் யாழ்ப்பாண பொது மக்கள் அன்றி படை வீரர்கள் அல்லர்.

மக்கள் நெருக்கமாக நடமாடும் பிரதேசங்களில் கைக்குண்டுத் தாக்குதல்களை நடத்தி, மக்களைப் பயமுறுத்தி சுமுகமான வாழ்க்கை நிலையைச் சீர்குலைத்தல், புனரமைப்பு — புனர்வாழ்வுப் பணிகளைச் சீர்குலைத்தல், யாழ்ப்பாணத்திலிருந்து இடம்பெயர்ந்து பல்வேறு பிரதேசங்களில் வாழும் மக்கள் மீண்டும் யாழ். குடாநாட்டிற்குள் வருவதைத் தடைசெய்தல், யாழ்ப்பாணம் சமாதானமான — பாதுகாப்பான — பிரதேசம் அல்ல என்பதை உள்நாட்டு மக்களுக்கும் வெளிநாடுகளுக்கும் உணர்த்துவது ஆகியனவே இத் தாக்குதல்களின் உள்நோக்கம் என்று தெரியவருகின்றது

எப்படியாயினும், இக்கைக்குண்டுகளைக் கண்டுபிடிப்பதில் அவை தொடர்பான மக்களின் தகவல்கள் மிக முக்கியமானவையாக அமைந்துள்ளன. எனவே இத்தகைய தகவல்களை வழங்கியதன் மூலம் அந்த மக்கள் தமது சகோதர மக்களுக்கு நன்மையளிக்கும் செயல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் இவ்வாறு செயற்பட்டது அந்தக் கைக்குண்டுகளுக்கு தமது உறவினர், நண்பர்கள் பலியாவதைக் காண முடியாத காரணத்தினாலாகும். இதன் மூலம் தமது பிரதேசத்தில் சமாதானத்தைத் தொடர்ந்து நிலைக்கச் செய்வதற்கு மட்டுமல்லாமல் தமது உறவினர், நண்பர்களினது உயிரைக் காப்பாற்றுவதற்கும் தமக்குரிய கடமையைச் சரியாகமேற்கொண்டுள்ளனர். இவர்களுக்கு சகல மக்களினதும் பாராட்டுக்கள் உரித்தாகியுள்ளன. — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## புலிகளை ஆதரித்து உரை நிகழ்த்தினால் நடவடிக்கை

### தமிழக டி. ஜி. பி. எச்சரிக்கை

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவான உரைகளை நிழ்த்துவோர் மற்றும் கோஷங்களை எழுப்புவோரை தமிழக பொலீஸ் டைரக்டர் ஜெனரல் (டி. ஜி. பி.) கே கே ராஜசேகரன் நாயர் கடுமையாக எச்சரித்துள்ளார்.

எவ்விதத்திலும் விடுதலைப் புலிகளுக்கான ஆதரவு நடவடிக்கைகளை மேற் கொள்ளலாகாது என்றும் —

அவ்வாறு எதுவும் இடம் பெறும் பட்சத்தில் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — அவர் எச்சரித்துள்ளார். (உ- 3)

## தப்பியோடிய துருப்புகளைப் பிடிக்க விமான நிலையத்தில் கண்காணிப்பு

கொழும்பு, நவ. 25

படைகளில் இருந்து தப்பி ஓடிய நபர்களைத் தேடிக் கண்டு பிடித்து கைது செய்யும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படவிருப்பதாக செய்திகள் வெளியானதை அடுத்து—

இவ்வாறு படைகளை விட்டு தப்பியோடியோர் தாங்கள் கைது செய்யப்படாமல் இருப்பதற்காக வெளிநாடுகளுக்குச் சென்று தலைமறைவாக முயற்சிக்கலாம் எனக் கருதப்படுகின்றது. இதனை அடுத்து கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

படைகளை விட்டு தப்பியோடியோர் வெளிநாடுகளுக்கு ஓடித்தப்புவதைத் தடுப்பதற்காக விமான நிலையத்தில் பயணிகள் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

படைகளை விட்டுத் தப்பியோடிய 21 ஆயிரம் பேரில் 4 ஆயிரத்து 206 பேர் இதுவரை சரணடைந்து சேவையில் மீண்டும் சேர்ந்துள்ளனர் என்றும்—

ஆயிரத்து 612 படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும்—

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

படைகளில் இருந்து தப்பி ஓடியவர்கள் மீளவும் படையில் சேர இம்மாதம் 30 ஆம் திகதி வரை கால அவகாசமும் பொதுமன்னிப்பும் அளிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

அதன் பின்னர் இத்தகையோரை தேடிக்கண்டுபிடித்து கைது செய்ய தீவிர நடவடிக்கை எடுக்கப்படும் என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-150)

## பாடசாலைகளில் புதுவித பாதுகாப்பு நடவடிக்கை!

கொழும்பிலும் சுற்றுப்புறத்திலும் பாடசாலைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் புதுவகையான பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

பாடசாலைக்கு மாணவர்கள் வந்ததும் ஒவ்வொரு வகுப்பு மாணவ தலைவர்களும் தமது வகுப்பின் ஏனைய சகல மாணவர்களின் புத்தகப் பைகளை சோதனையிட வேண்டும் என்றும் —

அதன் பின்பே மாணவர்கள் வகுப்புக்களுக்குள் அனுமதிக்கப்படுவர் என்றும்—

அறிவுறுத்தல் விடுக்கப்பட்டிருக்கின்றது. (உ-3-150)

## மாவீரர் தினத்தை ஒட்டிய நிகழ்வுகள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளில் மாவீரர் தினத்தையொட்டிய நிகழ்ச்சிகள் இடம்பெற்று வருவதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகள் அரசியல் பொறுப்பாளர் திரு. துரை அரசடித் தீவில் தமிழீழக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார்.

நினைவுக் கூட்டங்கள், பட்டிமண்டபங்கள், கலையரங்குகள் நடைபெறுகின்றன. பொது இடங்கள் மஞ்சள்; சிவப்புக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

சிரமதானப் பணிகளும், மரநடுகையும் இடம்பெற்று வருகின்றன.

படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பிரதேசத்திலும் மாவீரர் தின நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த 21 ஆம் திகதி முதல் தமிழீழம் எங்கும் மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கிறார்கள்.

நாளை மறுதினம் மாவீரர் தினமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வீரச்சாவடைந்த அனைத்துத் தியாகிகளையும் நினைவுகூருமுகமாக —

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முதன் முதலில் வீரச்சாவடைந்த லெப்டினன்ட் சங்கரின் (சத்திய நாதனின்) நினைவு தினமான நவம்பர் 27 ஆம் திகதி அவர் உயிர் பிரிந்த நேரமான மாலை 6 மணி 04 நிமிடத்துக்கு அனைத்துக் கோவில்களிலும், தேவாலயங்களிலும் அஞ்சலி மணி ஒலிக்கும் போது இரண்டு நிமிட மௌனாஞ்சலி செய்யப்படும் என்றும் —

அதன் பின்னர் வீடுகள்' வீதிகள் மற்றும் பொது இடங்களில் ஈகைச்சுடரேற்றப்படும் என்றும் —

விடுதலைப் புலிகள் அறிவித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலை 6.04 மணிக்கு முன்பதாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் மாவீரர் தின உரையை நிகழ்த்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-ரி)

---

உதயன்

## ஜனாதிபதியின் எச்சரிக்கை

நாடாளுமன்றத்தைக் கலைத்துப் பொதுத் தேர்தல் நடத்தப் போவதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா எச்சரித்திருக்கிறார். தமது எட்டுக் கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சில கட்சியினரும், அவற்றின் தலைவர்களும் தொல்லை கொடுப்பதாகவும், அது தொடருமாயின் நாடாளுமன்றத்தைக் கலைத்துவிடப் போவதாகவும் அவர் பயமுறுத்தி இருக்கிறார்.

பொதுசன ஐக்கிய முன்னணியில் மொத்தம் எட்டுக் கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. முன்னணியின் தலைமைத்துவத்துக்கும், அங்கத்துவக் கட்சிகள் சிலவற்றுக்கும் இடையிலான உறவில் கருத்து வேறுபாடுகளும் விரிசல்களும் முற்றி வருகின்றன.

ஸ்ரீமானியின் கட்சி ஒற்றையாட்சி முறை ஒழிப்பை ஆதரிக்கப் போவதில்லை என்று திரும்பத் திரும்பக் கூறிவருகிறது. உறுதியளிக்கப்பட்டது போல நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க அரசு பின்னடிப்பதையும் அது கண்டிக்கிறது.

மீன்பிடித் துறைமுகத்தை ஒலுவிலில் அமைப்பதா திருகோணமலையில் அமைப்பதா என்பதில் அமைச்சர் அஷ்ரப்புக்கும் ஜனாதிபதிக்கும் பெரும் கருத்து மோதல் உண்டாகியது. இருவருக்கும் இடையேயான மனத்தாபம் தீர்க்கப்பட்டு விட்டதாகக் கூறப்பட்டாலும், இன்னும் புகைந்து கொண்டிருக்கிறதாம்.

அது போதாமைக்கு 'கசினோ' சூதைமீண்டும் அறிமுகப்படுத்துவதற்கு எதிராக முஸ்லிம் காங்கிரஸ் எம். பிக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். அதற்குரிய சட்ட மூலம் சபைக்கு வரும் போது எதிர்த்து வாக்களிப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது.

சமசமாஜக் கட்சியினருக்கு உள்ளூராட்சித் தேர்தலை அரசு ஒத்திப்போட்டது குறித்து ஒரே வெப்பிகாரம். அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தியே அரசு அத்தேர்தலை ஒத்தி வைத்தது என்பதால், இம்முறை அச்சட்டத்தை நீடிக்கும் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, சமசமாஜக் கட்சி உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாக இருக்கவில்லை.

இவ்வாறு அரசுக்குள்ளே — அரசின் அங்கத்துவக் கட்சிகளிடையே — பெரும் கருத்து மோதல்களும் இழுபறிகளும் பெருகிவிட்டன. இத்தனைக்கும் அரசின் அதிகப்படி வாக்குப் பலம் ஒன்றேஒன்று தான்!

எனவே அங்கத்துவக் கட்சிகளைச் சமாளித்து ஒற்றுமைப்படுத்த முடியாத நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைக்கப் போவதாகப் பயமுறுத்துவதே அவர்களை வழிக்குக் கொண்டுவர ஒரே மார்க்கம் என்று ஜனாதிபதி எண்ணியிருக்க வேண்டும்.

நிலைமை மோசமடைந்து நாடாளுமன்றைக் கலைக்க நேரிட்டால் ஜனாதிபதி ஆட்சி வரும். தேர்தல் நடைபெற்று புதிய நாடாளுமன்றம் கூடும் வரை இனப்பிரச்சினைக்குரிய தீர்வு என்று அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவல் திட்டம் கிடப்பில் போடப்பட்டு விடும்!

பொதுத்தேர்தல் நடந்து நாடாளுமன்றம் கூடி உத்தேச தீர்வை அங்கீகரிக்கு முன்னர், அது நிறைவேற்றப்பட வேண்டுமாயின், இராணுவ ஆட்சி பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி எதனைச் செய்வார்? காலம் தான் பதில் சொல்லும்.

---

## ரிவோல்வர் கடத்திய கோப்ரல்

கொழும்பு, நவ. 25

சுகவீன லீவில் சென்ற இராணுவ கோப்ரல் ஒருவரிடம் இருந்து ரிவோல்வர் ஒன்றை சோதனையின் போது பொலீஸார் கைப்பற்றியுள்ளனர்.

வடக்கு - கிழக்குப் போரில் ஈடுபட்ட இவர் சுகவீன லீவில் கண்டியில் உள்ள தமது வீட்டுக்கு சென்ற சமயம் தம்முடன் ரிவோல்வரையும் எடுத்துக்சென்றதாகத்தெரிய வந்தது. (உ-3-150)

## வதந்தி பரப்பிய அறுவர் கைது

கொழும்பு, நவ. 25

அம்பத்தளை நீர்த்தேக்கத்தில் விஷம் கலக்கப்பட்டதாக வதந்தியைப் பரப்பி அரசுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தி, தமிழ் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டவர் என்ற சந்தேகத்தின் பேரில் இரகசியப் பொலீசாரால் ஆறுபேர் கொழும்பின் பல பகுதிகளிலும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி இரவு இவ்வாறு வதந்தி பரப்பப்பட்டது. கைது செய்யப்பட்ட அறுவரில் நால்வர் பெண்களாவர்.

(உ-10)

## அன்னை தெரேஸாவுக்கு இருதய நோய்

மணிலா, நவ. 25

மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அன்னை தெரேஸாவுக்கு நேற்றுக் காலை இரண்டாவது முறையாக இருதய அழுத்தம் ஏற்பட்டது. மருத்துவர்கள் பிராண வாயு செலுத்தி இருதய அழுத்தத்தைக் கட்டுப்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-ரி)

## வவுனியாவில் 22 பேர் கைது 20 பேர் விடுதலை

கடந்த வியாழக்கிழமை வவுனியாவில் பூவரசங்குளம், பாவற்குளம் பகுதியில் படையினர் தேடுதல் நடத்தினார்கள். இத் தேடுதலின் போது ஜி சீ. ஈ. (உயர்தர) வகுப்பு மாணவர்கள் அறுவர் உட்பட 22 பேரைபடையினர் கைது செய்தனர்என்று தெரிவிக்கப்படுகின்றது.

செஞ்சிலுவைச் சங்கத் செயலாளர் கிஷோர் இது குறித்து படையினருடன் தொடர்பு கொண்டதையடுத்து மறுநாள் 20 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

இரு மாணவர்கள் இன்னமும் விடுதலையாகவில்லை.

(உ-3-150)

### நாளை

கார்த்திகை 11
செவ்வாய்க்கிழமை
திதி: பிரதமை
முற்பகல் 10.05 வரை.
நட்சத்திரம்: ரோகினி
நண்பகல் 12.19 வரை.
ராகுகாலம்: 3.12- 4.42
சுபநேரம்: 10.42 -12.12
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தகவல் தெரியாத நிலையில் உள்ள

# 230 பேரின் விவரங்களை மக்கள்குழு ஜானக பெரேராவிடம் கோருகின்றது

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். மாவட்டத்தில் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போயுள்ளதாகக் கருதப்படும் அல்லது தகவல் தெரியாத நிலையில் உள்ளதாகக் கருதப்படும் 230 பேரின் விவரங்களைத் தந்துதவுமாறு சமாதானத்துக்கும், நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவைக் கேட்டுள்ளது.

தகவல் தெரியாது உள்ளவர்களில் 35 பேர் மாணவர்கள் ஆவர். 12 மாணவர்கள் ஜி. சீ. ஈ. (உயர்தர) பரீட்சைக்கு தோற்ற முடியாது போனவர்கள். ஐவர் பல்கலைக்கழக மாணவர்கள். ஒருவர் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர். ஒருவர் தொழில் நுட்பக் கல்லூரி மாணவன். ஏனைய 16 மாணவர்களும் ஜி. சீ. ஈ (சாதாரணதர) வகுப்பு மாணவர்கள்.

விரைவில் இவர்கள் தொடர்பான விசாரணைகளை முடித்து, அவர்கள் கல்வியைத் தொடர உதவவேண்டும் — என்று அக்குழு மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுள்ளது. (உ-3)

மாணவி கிருஷாந்தி கொலை வழக்கு

# கொலைக் குற்றச்சாட்டு மட்டுமே! கற்பழிப்புக் குற்றச்சாட்டு இல்லை!!

கொழும்பு, நவ. 25

சுண்டுக்குளி மாணவி கிருஷாந்தி குமாரசாமி மற்றும் அவரது தாயார், சகோதரர், அயலவர் ஆகியோரின் படுகொலை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ள 11 படையினருக்கும் எதிராக இந்த நால்வரையும் கொன்ற தான குற்றச்சாட்டுக்கள் மட்டுமே சுமத்தப்படும் என்று பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் சி.ஆர்.டி. சில்வா தெரிவித்தார்.

கிருஷாந்தி குமாரசாமி கற்பழிக்கப்பட்டமைக்கான சாட்சியங்கள் இல்லை. சடலம் உருக்குலைந்து விட்டதால் அவர் கற்பழிக்கப்பட்டாரா என்பதை அறிய முடியவில்லை என்று சட்ட வைத்திய அதிகாரி தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யாழ். மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் இந்த வழக்கு விசாரிக்கப்படும். அங்கு சாட்சியங்கள் பதிவு செய்யப்படும். இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்துவதற்கு போதிய சாட்சியங்கள் இருப்பதாக மாஜிஸ்திரேட் நீதிமன்ற விசாரணையில் காணப்பட்டால் வழக்கு மேல் நீதிமன்றத்துக்கு பாரதீனப்படுத்தப்படும் — என்று அவர் தெரிவித்தார்.

யாழ். நீதிமன்றத்தில் குற்றச்சாட்டைச் சமர்ப்பித்த பின்னர் அந்த வழக்கை கொழும்புக்கு மாற்றும் சாத்தியம் உள்ளதா என்பது குறித்து சட்டமா அதிபர் ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் சிறைக்கூட வசதியில்லாததால் சந்தேக நபர்களை கொழும்பில் இருந்து அங்கு கொண்டு செல்வதிலும் அங்கிருந்து இங்கு மீளவும் அழைத்து வருவதிலும் சிக்கல் உள்ளது என்றும் அவர் கூறினார்

சந்தேக நபர்கள் மீது வழக்குத் தொடருவது குறித்து இன்னமும் உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார். (உ-3-150)

# புலிகளுக்குத் தடை விதிக்கும்படி பிரான்ஸை சந்திரிகா கோருவார்?

லண்டன், நவ. 25

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பாரிஸ் விஜயத்தின் போது, பிரான்ஸில் விடுதலைப் புலிகள் செயற்படுவதையும் அந்த இயக்கத்துக்கு அங்கு நிதி திரட்டப்படுவதையும் தடுத்து நிறுத்துமாறு பிரான்ஸ் அதிபரிடம் கோருவார்.

வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டிருக்கிறது.

குமாரதுங்காவுக்கும் பாரிஸ் நகருக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது. இலங்கையில் அரசியலில் ஈடுபட முன்னர் அவர் நீண்ட காலம் பிரான்ஸில் கல்வி பயின்றவர்.

ஆனால் இரு நாடுகளுக்கும் இடையிலான முக்கிய பிரச்சினை அரசியல்தான். பிரான்ஸ் ஏனைய பல நாடுகளைப் போல தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் நிதி திரட்டுவதற்கான அலுவலகம் ஒன்றை பிரான்ஸில் வைத்திருப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. சிறிலங்காவின் வடக்கு - கிழக்குப் பகுதியில் தனித்தமிழ் நாடு ஒன்றை அமைக்கத் தமிழ்ப்புலிகள் 13 ஆண்டுகள் நடத்திக் கொண்டிருக்கும் விடாப்பிடியான யுத்தத்திற்காக பிரான்ஸ், கனடா போன்ற வெளிநாடுகளில் வாழும் தமிழ்மக்கள் பொருளாதார உதவிகள் வழங்கி வருகிறார்கள். இவ்வாறு நிதி திரட்டுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இலங்கை அரசும் விரும்புகிறது. இந்தவார இறுதியில் பிரான்ஸ் ஜனாதிபதியை இலங்கை ஜனாதிபதி சந்திக்கும்போது இந்த விடயம் பற்றி கட்டாயமாகப் பேசப்படும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். — இவ்வாறு பி பி. ஸி குறிப்பிட்டது. (உ-ரி)

# தெரிவுக்குழு இவ்வாரம் இணைப்பு குறித்து ஆராயும்

கொழும்பு, நவ. 25

இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைத்துள்ள யோசனைகளில் முக்கிய அம்சமான — அதிகாரப்பரவலாக்கல் அலகான — வடக்கு - கிழக்கு இணைப்பு விடயம் இவ்வாரம் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் ஆராயப்படவிருக்கிறது

இவ்வாரம் நான்கு நாள்கள் கூட விருக்கும் — அரசமைப்புத் திருத்தம் தொடர்பான — நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் விவாதம் முக்கியமானதாக அமையும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். (உ- 3- 150)

# துணை மருத்துவ ஊழியர் தொழிற்சங்க நடவடிக்கை

## வைத்திய சேவைகள் பாதிப்பு

கொழும்பு, நவ. 25

துணை மருத்துவ ஊழியர்களின் சட்டப்படி வேலை செய்யும் இயக்கம் காரணமாக வைத்தியசாலைகளில் உள்ள நோயாளிகள் பெரும் கஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சத்திரசிகிச்சைகளும் பாதிக்கப்பட்டுள்ளன.

கொழும்புத் தேசிய வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் காமினி ரெறன்ஸ் டி சில்வா, வைத்தியசாலையின் ஏனைய பிரிவுகள் இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையால் பாதிக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

எக்ஸ்ரே தொழில் நுட்பவியலாளர்கள், மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள், மருந்தாளர்கள், உடற் கூற்று சிகிச்சையாளர்கள் போன்ற துணை மருத்துவ ஊழியர்களே சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர். (உ-ரி)

மரண அறிவித்தல 2 ஆம் பக்கத்தில

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற் லிமிடெட்டினரால்) யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/ இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25-11-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# கடலில் வீழ்ந்து நொருங்கிய விமானத்தில் 9 இலங்கையர்!

லண்டன், நவ. 25

நேற்று முன்தினம் கடத்தப்பட்ட பின்னர் இந்து சமுத்திரக் கடலில் வீழ்ந்து நொருங்கிய எதியோப்பிய ஏயர் லைன்ஸின் 'போயிங் —747' விமானத்தில் அச்சமயம் 9 இலங்கைப் பயணிகளும் 19 இந்தியப் பயணிகளும் இருந்ததாக அறிவிக்கப்படுகின்றது. அவர்களின் கதி என்னவாயிற்று என்பது குறித்து உத்தியோகபூர்வ தகவல்கள் ஏதும் வெளியாகவில்லை.

மூன்று கடத்தல்காரர்கள் இந்த விமானத்தைக் கடத்தியதாக அறிவிக்கப்பட்டது.

(விவரமான செய்தி 3 ஆம் பக்கத்தில்.)

# நியூஸிலாந்து வெற்றி!

லாகூர், நவ. 25

லாகூரில் பாகிஸ்தானுக்கும் நியூஸிலாந்துக்கும் இடையில் நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் ஆட்டத்தில் நியூஸிலாந்து 44 ஓட்டங்களால் வென்றது.

வெல்வதற்கு 276 ஓட்டங்களைப் பெற வேண்டிய பாகிஸ்தான் அணி நேற்று முன்தினம் ஆட்டம் முடிவடைந்தபோது முதல் 5 விக்கெட்டுக்களையும் இழந்து 46 ஓட்டங்களை மட்டும் பெற்றிருந்தது.

நேற்று பாகிஸ்தான் வீரர் முகமட் வாஸிம் ஆட்டமிழக்காமல் பெற்ற சதத்தால் பாகிஸ்தான் வெற்றி இலக்கை நெருங்கியது; ஆனால் வெல்ல முடியவில்லை.

ஓட்ட விபரம் வருமாறு:-

★ நியூஸிலாந்து — 155 மற்றும் 311

★ பாகிஸ்தான் — 191 மற்றும் 231.

பாகிஸ்தான் மண்ணில் நியூஸிலாந்து பெற்ற முதல் டெஸ்ட் வெற்றி இதுவாகும்.

# யாழ். ஆஸ்பத்திரிக்கு பிரான்ஸ் வைத்தியக்குழு

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ். ஆஸ்பத்திரியில் பிரான்ஸ் வைத்திய குழு விரைவில் தனது பணிகளை ஆரம்பிக்கவிருக்கிறது

யாழ் ஆஸ்பத்திரியில் நிலவும் டாக்டர் தட்டுப்பாட்டை தொடர்ந்து கொழும்பு சென்றிருந்த யாழ் வைத்தியசாலைக் குழு நடத்திய பேச்சுக்களையடுத்து யாழ். ஆஸ்பத்திரியில் பணியாற்ற எம். எஸ். எவ். என்றழைக்கப்படும் பிரான்ஸ் வைத்தியக்குழு சம்மதம் தெரிவித்துள்ளது.

இக்குழுவில் அறுவைச் சிகிச்சை நிபுணர் ஒருவரும், குழந்தை வைத்திய நிபுணர் ஒருவரும், பெண் நோயியல் நிபுணர் ஒருவரும் இடம்பெறுவர்.

யாழ் நகரப் பகுதியில் தங்கி முழுநேரமும் யாழ் ஆஸ்பத்திரியில் இவர்கள் பணியாற்றுவர்.

பாதுகாப்பு அமைச்சின் அனுமதி கிடைத்ததும் இக்குழு தனது பணியை யாழ். ஆஸ்பத்திரியில் ஆரம்பிக்கும்.

பருத்தித்துறை மந்திகை ஆஸ்பத்திரியில் பணியாற்றும் பிரான்ஸ் வைத்திய குழு தற்சமயம் வாரத்தில் ஒருநாள் யாழ் ஆஸ்பத்திரியில் பணியாற்றுகிறது.

யாழ். ஆஸ்பத்திரிக்கு புதிய குழு வந்து சேர்ந்ததும் இக்குழு தனது பணியை நிறுத்தி விடும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## காலமானார்

யாழ்ப்பாணம், நவ. 25

மலையகத்தின் முதல் கதைப்புத்தகமான 'யார் கொலைகாரன்?' என்ற படைப்பை எழுதி வெளியிட்ட எழுத்தாளர் மு வெ. பெ. சாமி தமது சொந்த ஊரான பதுளையில் தெளிவத்தையில் அண்மையில் காலமானார். 1983 இற்குப் பின்னர் சில ஆண்டுகள் இவர் யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தார். (உ)

யுத்தத்தில்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டபோது பாதுகாப்பு அமைச்சு மறுக்கவும் இல்லை; உறுதி செய்யவும் இல்லை.

★ அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் கட்டளைப் பீடத்தைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் அனுராதபுரத்தில் சாலியபுரவில் இலங்கை இராணுவத்தினருக்கு தீவிரவாத எதிர்ப்புப் பயிற்சியை அளித்துள்ளனர்.

★ இலங்கையில் படைப் பயிற்சிக் கல்லூரி ஒன்றை நிறுவ அமெரிக்கா முடிவு செய்துள்ளது. — என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-150)

தலைநகர்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாதுள்ளது என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் அமைப்புடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 60 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் சொன்னார்.

குண்டு துளைக்காத அங்கிகளையும், உருக்குத் தொப்பிகளையும் அணிந்த பொலீஸார் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்.

தமிழர் கூடுதலாக வாழும் பகுதிகளில் பொலீஸார் தமிழரின் வீடுகளில் பிரவேசித்து திடீர் சோதனைகளை நடத்துகிறார்கள்.

பாக்கு நீரிணைக் கடலிலும் கடற்படை ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. (உ-3-150)

சந்திரிகா--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சரையும் திருமதி குமாரதுங்க சந்தித்துப் பேசுவார் என ஏ.எவ்.பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

பிரெஞ்சு உள்துறை அமைச்சரைச் சந்திக்கவிருக்கும் ஜனாதிபதி அந்நாட்டில் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் குறித்தும் பேசுவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-ரி)

# வலிகாமத்தில் 'றோயல் பிளஸ்' நடவடிக்கை

கொழும்பு, நவ. 25

வலிகாமம் மேற்கில் கடந்த மாதம் 29 ஆம் திகதி படையினர் ஆரம்பித்த இராணுவ நடவடிக்கைக்கு 'ஒப்பரேஷன் றோயல் பிளஸ்' எனப் பெயரிடப்பட்டிருந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. இந்நடவடிக்கை தொடர்வதாகவும் அறிவிக்கப்பட்டது. (உ)

பாரிஸ்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரான்ஸ் நாட்டு அதிகாரிகள் பாரிஸில் ஜனாதிபதியின் விஜயம் தொடர்பாக பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ- ரி)

திருமலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர்.

காலை 5-30 மணி முதல் 9-30மணி வரை சுற்றிவளைத்துத் தேடுதல் நடைபெற்றது.

இத்தேடுதலின் போது இரு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-3-150)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org